செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது.

உ
சிவமயம்

இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி௵ (1889) ஆவணி மீ 28 உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அடு] யாழ்ப்பாணம்:- விரோதிகிருது௵ ஆவணிமீ ௪ உ வெள்ளிக்கிழமை (20-8-1971) [இல-௧௧

சைவமக்களே! பங்குபற்றுங்கள்

திருக்கேதீச்சரத் தல அடிக்கல் நாட்டு விழா

நிகழும் விரோதிகிருது௵ ஆவணித் திங்கள் 11 ஆம் நாள் (27—8—71) வெள்ளிக்கிழமை காலை 6-05 மணிக்கு வரும் சிங்கலக்கின சுபமுகூர்த்தத்தில். ஈழத்தின் பழம்பெரும் சிவாலயமாகிய திருக்கேதீச்சரத்தில்,

திருக்கேதீச்சரநாதன் சந்நிதி, கௌரியம்பாள் சந்நிதி, சண்டேசுரர் சந்நிதி, நவக்கிரக சந்நிதி ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டத் திருவருள்பாலித்துள்ளது.

ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகட்கு முன் பன்னரும் சிறப்புமிக்க இவ்வாலயத்திற்கு அடிக்கல்நாட்ட அடியார்களுக்குக் கிடைத்த பெறும்பேறு மீண்டும் இன்று கிடைக்கிறது மேலும் பல்லாயிரம் ஆண்டு நிலைபெறுமாறு இக் கோவில் நிர்மாணிக்கப்பெறுவதால் ஷ அடிக்கல் நாட்டும் விழா மிகமுக்கியமானது. இதனை கருத்திற்கொண்டு பெரும் திரளாக வரும் அடியார்கள் அனைவரும பங்குபற்றி இறையருள்பெறும் வகையில் ஒழுங்குகள் செய்யப்படுகின்றன

அடியார்கள் அனைவரையும் இவ்வைபவத்திற் பங்குபற்றி கௌரியம்பாள் சமேத திருக்கேதீச்சரநாதனருள் பெற்றுய்யுமாறு, திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபைச் சார்பாக ச. சோமசுந்தரம் (தலைவர்), சி. கந்தையா (செயலாளர்) ஆகியோர் அழைப்புவிடுத்துள்ளனர்.

திருக்கேதீச்சர ஆலய புனருத்தாரண சபை (மலாயாக் கிளை)

27-8-71 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கோலாலம்பூர் சுந்தசுவாமி கோவிலுக்கணித்தாகவுள்ள கலாமண்டபத்தில் திருக்கேதீஸ்வரம் சிவன், அம்பாள் ஆலயங்கள் திருப்பணிக்கு அத்திவாரமிடுவதை முன்னிட்டு அது இனிது நிறைவுற இறைவழிபாடு நடத்தப்பெறும்.

திருக்கேதீச்சரத் தேவாரப் பதிகங்கள் ஓதுதல், திருக்கேதீச்சர மேன்மை பற்றியும், புனருத்தாரணத்திற்கு உழைத்த பெரியார்களைப் பற்றியும் விரிவுரைகளும் நிகழவிருக்கின்றன. ——

வெருகல், சித்திரவேலாயுத சுவாமி கோவில் உற்சவம்

ஈழவளநாட்டின் பெயர் பெற்ற கந்தகோட்டங்கள் பலவற்றுள் மிகவும் அருட்டன்மை வாய்ந்தாக வெருகலம்பதியில் உள்ள வேலாயுதசுவாமி கோவில் விளங்குகின்றது. இவ்வாலயப்பகுதியினை அண்டியிருக்கும் பல கிராமங்களும் பழமையான சைவ புனித அனுஷ்டானங்களைக் கொண்டதாக சைவ ஆலயங்களுக்கு அவ்வப் பகுதி மக்கள் செய்த தொண்டினைக் கொண்ட காரணப் பெயர்களைக் கொண்டும் விளங்குகின்றன. இப்பகுதிக்குத் தெற்கே வங்காள விரிகுடாவில் மகாவலிகங்கை, கொட்டியாபுரக்குடாவில் வெருகல் கங்கை குருக்கள் கங்கை என இரு பிரிவுகளாகப் பிரிந்து செல்கின்றது. வெருகல் என்னுங் கங்கை இளமுருகன் எழில் காண ‘‘அரோகர’? என்னுஞ் சத்தத்தோடு பாய்ந்து செல்லும் பரிசுத்த தன்மையுடன் விளங்குகிறது.

இவ்வாலயம் பற்றிய வரலாறு “திருக்கோணாசல வைபவம்'' என்னும் நூலில் விளக்கப்பெற்றுள்ளது. இவ்வாலயத்தில் இவ்வருட ஆவணித்திங்கள் உத்தர நட்சத்திரமான 7-ம் நாள் (23-8-71) திங்கட்கிழமை ஆரம்பமாகி 18 நாட்கள் திருவிழா நடைபெறும்.

முதல் ஆறு நாட்களும் பிள்ளையாரும் ஆதிதேவரும் உள்வீதி வலம்வருவர். 7-ம் நாள் சந்திக்காவல் நடைபெற்று சுவாமி வெளிவீதி வலம்வருவார் 9-ம் நாளன்று சித்திரவேலாயுத சுவாமி கேடகத்தில் எழுந்தருளிவருவார். 18ம் நாள் வேட்டைத் திருவிழா நடைபெறும் திருவிழாக்களின் போது ஏரானமான காவடியாட்டங்கள் கண்கொள்ளாக் காட்சியாக விருக்கும். ——

அரியாலை, சித்திவிநாயகராலய திருவிழா

அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் கோவிலில் வருடாந்த மகோற்சவம் ஆவணி மாதம் 10-ம் திகதி (26-8-71) வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணி கொடியேற்றத்துடன் ஆரம்பமாக இருக்கின்றது. 4-9-71 காலை 9 மணிக்கு இரதோற்சவமும், அடுத்த நாள் காலை 8 மணிக்கு தீர்த்தோற்சவமும நிகழும். இக் கோவிலில இராஜ கோபுரமும் மணிக்கோபுரமும் கட்டப்பெற்று சாந்துப் பூச்சுவேலையும்முற்றுப்பெற்று, சிற்பங்கள் அமைப்பதற்கும், வர்ணந் தீட்டுவதற்கும் பெருந்தொகைப்பணம் தேவையெனவும், விரைவில் இத் திருப்பணி நிறைவுபெற அன்பர்களின் மனம் நிறைந்த ஆசியும், பண உதவியும வேண்டுமென ஷ கோவில் மனேஜரும திருக்கோபுரச் செயற்குழுச்செயலாளரும் பொருளாளருமாகிய திரு சி. பொன்னம்பலம் தெரிவிக்கின்றார்கள். ——

அவர் ஒரு தொண்டன்

அவர் பிரிவு ஈடுசெய்யமுடியாத இழப்பு

சைவப்பெரியார் திரு. சு. சிவசுப்பிரமணியம் அவர்கள் கொழும்பு
(சைவபரிபாலன சபை ஆயுள் அங்கத்தவர்)

உலகுக்குக் கருத்தா சிவபெருமான். அவர் ஆன்மாக்களை இரட்சிக்கும் பொருட்டுப் படைத்தல் காத்தல் அழித்தல முதலிய கிரியைகளை முறையே பிரமாவையும் விஷ்ணுவையும் இயம தருமராசனையும் அதிட்டித்து நின்று புரிகின்றார். வினைப் போகமே ஒரு தேகம். வினை தானொழிந்தால் அத் தேகம் தினைப்போதளவும் நில்லாது. வினையொழிந்தவுடன் இயம தருமராசன் ஒரு உடலினின்றும் உயிரைக் கவர்ந்துவிடுவான். அந்தவகையில் நமது மதிப்புக்கும் அன்புக்குமுரிய பெரியார் திரு. ஆ தனபாலசிங்கம் அவர்கள் எம் மத்தியினின்றும் பிரிந்துவிட்டார். அவர் நமது நாட்டில் வாழும் மக்களுக்குள்ளே ஒரு சிறந்த உத்தமன். அவர் யாழ்ப்பாணத்தில் ஒருபிரசித்திபெற்ற சைவக் குடும்பத்தைச் சேர்ந்

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

நந்தி இசை மன்றம் மிருதங்க இசைவிழா

யாழ். திருநெல்வேலி நந்தி இசை மன்றத்தின் 3-ஆவது ஆண்டு மிருதங்க இசை விழா திருநெல்வேலி கலாமண்டபத்தில் 25, 26-8-71 ஆகிய தினங்களில்சிறப்புற நிகழவிருக்கிறது.

சைவ நூல்நிலையம்

நல்லை, ஞானசம்பந்தர் ஆதினத்தில் சைவசமய நூல்நிலையமொன்று ஆரம்பித்து வைக்கப் பெற்றுள்ளது. (ந. கி)

யாழ். அண்ணாமலை இசைத்தமிழ்மன்றம் தமிழிசைப் பெருவிழா

யாழ்ப்பாணம்- அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் 12-ஆவது ஆண்டு தமிழிசைப் பெருவிழா நல்லை. திருஞானசம்பந்தர் ஆதீனக்கலாமண்டபத்தில் எதிர் வரும 27-8-71 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-30 மணியளவில் ஆரம்பமாகி 4-9-71 வரை தொடர்ந்து நடைபெறவிருக்கிறது. தினமும் ஷ மன்றத்தில் பயின்ற மாணவ மாணவிகள் இசை விருந்தளிப்பார்கள் வெள்ளிக்கிழமை இரவு 7-15 மணிக்கு விழாத்தலைவர் சங்கீதபூஷணம் திரு. கு. வேலாயுதபிள்ளை தலைமையுரை நிகழ்த்துவார்கள். ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்கள். இசை விழாவில் மன்றத்தில் பயின்ற மாணவ மாணவிகளின் வயலின், மிருதங்கம், பாட்டு இசை நிகழ்ச்சிகள் முக்கிய இடம்பெறும். விழா தினமும் இரவு 10-30 வரை நிகழ்ச்சிகள் இடம்பெறும். ராஜா சேர். மு. அண்ணாமலைச் செட்டியார் குமாரர் டாக்டர் ராஜா சேர். அ. முத்தையா செட்டியார் உட்பட தமிழகத்திலிருந்து பல அறிஞர்கள் இம் மன்றத்தின் அரிய பணிகளை பாராட்டிச் செய்திகள் வெளியிட்டுள்ளனர். (ந. நி)

நூல் வெளியீட்டு விழா

சிவஞானசித்தியார் - சுபக்கம்

திருவிளங்கதேசிகர் புத்துரை

யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகம் பதிப்பித்துள்ள சிவஞான சித்தியார் - சுபக்கம் திருவிளங்கதேசிகர் உரை வெளியீட்டு விழா, நிகழும் விரோதி கிருது வருஷம் ஆவணி மாதம் 15-ம் திகதி (31—8—71) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் நிகழவிருக்கின்றது.

அப்போது இலங்கைப் பல்கலைக் கழக முன்னை நாள் பௌதிக விஞ்ஞானப் பேராசிரியர் கலாநிதி ஆ. வி. மயில்வாகனம்M. A. Ph. D. (Cantab) தலைமை தாங்குவார்கள்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை வாழ்த்துரையும், புலவர்மணி சோ. இளமுருகனார் வாழ்த்துப்பாவும் வழங்குவார்கள்.

முதலியார் செ. முத்துத்தம்பி, சி. கதிரவேற்பிள்ளை (கோப்பாய் நா. உ) ம. ஸ்ரீ காந்தா, திரு. மு. ஞானப்பிரகாசம், பண்டிதர் நா. ஏகாம்பரம் (பிறக்டர்) திரு. இ சபாலிங்கம், திரு. க. சி. குலரத்தினம், திரு இ. செல்லத்துரை முதலியோர் பாராட்டுரை நிகழ்த்துவார்கள்.

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

விரோதிகிருது ௵ ஆவணி ௴ ௪-உ வெள்ளிக்கிழமை [1971]

நல்லைக் கந்தனை வந்திப்போம்

19-8-71-ல் நல்லூர் முருகனுடைய இரதோற்சவம். சண்முகப் பெருமான் கொடி, குடை ஆலவட்டம் முதலிய விருதுகளுடன் இசைக் கருவிகள் சேவிக்க அடியார்கள் 'அரோகரா' 'அரோகரா' என்று துதிக்க அந்தணர்கள் வேதத்தியயனஞ் செய்ய கோவிலிலிருந்து புறப்பட்டு தாமே எல்லா ஆன்மாக்களையும் இரட்சிக்கின்ற பெருமான் என்ற கருத்துத் தொனிக்க வள்ளியம்மையார் தெய்வயானையம்மையாராகிய இரு சக்திகளுடன் திருக்கரங்களில் ஞான சத்தியாகிய வேல், வாள் குலிசம் மணி கொடி முதலியன விளங்க பலவகையாக அலங்கரிக்கப்பெற்ற இரதத்தில் அடியார்களுக்கு அருளை நல்கும்பொருட்டு எழுந்தருளினார். அருளொழுகிக் கொண்டிருக்கும் அவருடைய ஆறு திருமுகங்களும் அவர் அடியார்களுக்கு வேண்டிய வரங்களை ஈவாரென்பதை விளக்குகின்றன. அவருடைய திருமேனி ஞானமே உருவானது. அவர் வஞ்சகமற்று மனமுருகி வழிபடுகின்றவர்களுக்கு எளிதில் தோன்றி அவர்கள் உள்ளத்தில் உறைவார். தீயவர்களும் அவருடைய சந்நிதானத்தை அடைந்தால் தூயராவர். அதற்கு மாயையின் மகனாகிய சூரபன்மனே சான்றாகும். அவன் சுப்பிரமணியப் பெருமானை மதியாது போர் புரிந்து ஈற்றில் அவருடைய திருவருளைப் பெற்றுச் சேவலும் மயிலுமாகி அவருக்குச் சேவை புரியும் பேற்றைப் பெற்றான்

தீயவை புரிந்தா ரேனுங் குமரவேடிரு முன்னுற்றாற்
றூய வராகி மேலைத் தொல்கதி யடைவ ரென்கை
யாயவும் வேண்டுங் கொல்லோ வடுசமரிந்நாட் செய்த
மாயையின் மகனுமன்றோ வரம்பிலா வருள்பெற் றுய்ந்தான்.

எத்துணைத் தீவினைகளைச் செய்தோராயினும் சுப்பிரமணியப் பெருமானுடைய திவ்விய சந்நிதானத்தில் வந்தால் தூயோர்களாய் மேற்கதியை அடைவாரென்பதை ஆகமப் பிரமாணங்களோடு ஆயவும் வேண்டுமோ! அவரோடு இந்நாள் வரையும் போர் செய்த மாயையின் புதல்வனாகிய சூரபன்மனுமன்றோ அவருடைய எல்லையில்லாத திருவருளைப்பெற்றுஉய்ந்தான். ஆகையினால் சண்முகப்பெருமானுக்கு களங்கமில்லாத அன்பினைச் செலுத்தி அவருடைய திருவடி ஞானத்தைப் பெறுவோமாக.

யாழ்ப்பாணத்திலும் பிறவூர்களிலும் வதியும் மக்கள் சண்முகப்பெருமானுடைய உற்சவ காலங்களில் ஆசார சீலராய் தூயவுணவருந்தி அவரை வழிபட்டு அவருடைய திருவருளைப் பெறுதற்கு அருகதையுடையவரானார்கள். தவ வாழ்க்கையை மக்கள் தினமும் நடத்த இம்மகோற்சவம் உதவுகின்றது. ஒரு ஆலயத்தில் மகோற்சவம் நடைபெறுகின்றமை அங்கு நிகழும நித்திய நைமித்தியங்களில ஏற்படும் குறைகளை நீக்குவதற்கேயாகும். ஆலயங்களில் உற்சவங்கள் நடப்பது மக்களுக்குத் தவத்தை நினைவுறுத்தலேயாகும். மக்கள் யாவரும் சண்முகப் பெருமானுடைய திருவடிகளை பக்தியுடன் சிந்தித்து வந்திப்பார்களாக. அப்பொழுது அவர்கள் எத்தொழிலைச் செய்தாலும் எககோலங் கொண்டாலும் மன்னியசீர் சங்கரன்தாளை மறவாது வாழ்வார்கள். சண்முகப் பெருமானுடைய திருவருள் அத்தகையவர்களுக்கு எளிதில் கைகூடும்.

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

நல்லூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி

பாலனென் றவமதித்த பகைவனா மசுர ராசன்
சீலமார் மயிலு நல்ல சேவலு மாய்முன் வந்து
மாலகன் றடிமை யாய வாறுகண் டவர்க ணல்லூர்
வேலவன் றொண்டை யன்றிவேறு தொண்டதனைச் செய்யாரே.

செய்யரு டிருநல் லூரிற் சீர்க்கும ரேச மேலா
மைவரு சேய்க ளாகி யறவரு மூட்டு பாலுண்
மெய்வரு பதியே மாயமலவிருள் வலியை வீட்டிப்
பொய்வரு மிந்த மெய்போம் போதுதா பதப்பூ வில்லே.

சரவணை ஆ. தில்லைநாதப் புலவர்.

குரு வகுப்பு ஓங்கினால் சைவமோங்கும்

(நாயன்மார்கட்டு நிருபர்)

“அகரமானதெழுத்துக்கள் எல்லாவற்றிற்கும் முதலாயிருப்பதுபோல இறைவன் உலகுக்கு முதலாயிருக்கின்றார். உயிர்கள் எல்லாந் தன்னுடைய சிவமாந் தன்மையைப் பெற வேண்டுமென்ற கருணையையுடையவர் இறைவன். இறைவனை ஆண்பாற் படுத்திச் சிவனென்றும் பெண்பாற்படுத்தி உமையென்றும் கூறுவர். சிவனும் உமையும் வேறல்லர். இருவரும் நெருப்பும் சூடும் போலவும் பூவும் மணமும் போலவும் மணியும் ஒளியும் போலவும் பிரிப்பின்றியிருக்கின்றனர். சிவன் குணி உமை குணம். சிவனுடைய கருணையே அவனுடைய சக்தி. இக்கிராமத்தில் சக்தியாகிய உமையம்மையாருக்கு சிறந்த கோயிலமைத்து அங்கே பிரதிட்டை செய்யப்பெற்ற தேவிக்கு இராஜராசேஸ்வரி என்னும் திருநாமஞ் சூட்டி பக்தி சிரத்தையுடன் நித்திய நைமித்திகங்கள் உற்சவங்கள் வழிபாடுகள் நடைபெற்று வந்தன. சமீபத்தில் திருப்பணிகள் புதுக்கப்பெற்று, அண்மையில் மகா கும்பாபிடேகம் நடந்ததைத்தொடர்ந்து நாற்பத்தைந்து தினம், மண்டலாபிடேகம் நடந்தேறியது. இவை சம்பந்தமான கிரியைகளை எல்லாம் ஆகம விதிப்படி நிகழச் செய்து, கோயிலில் தெய்வ சாந்நித்தியத்தை யாவரும் தரிசனஞ் செய்து அம்பாளுடைய திருவருளைப் பெற அநுக்கிரகஞ் செய்த குருக்கள் அவர்களை வந்தித்துப் பாராட்டிச் சிறப்புச் செய்வதற்காக, இவ்வளவு திரளாக இங்கு கூடியிருக்கிறீர்கள். கும்பாபிடேக தினம் தொடக்கம் இற்றைவரை நிகழ்ந்த கிரியைகளுக்குள் இது சிறந்ததாகும். குருவில்லாமல் நாங்கள் இறைவனை வழிபட முடியாது. குரு அஞ்ஞானத்தைக் கெடுத்து, ஞானத்தைக் கொடுப்பவர்.

கோவிலில் பிரதிட்டை செய்யப்பட்ட திருவுருவத்தில் தமது மந்திரக் கிரியா பாவனைகளினாலே தெய்வ சாந்நித்தியத்தை யுண்டுபண்ணுபவர் குருவே.

பெரிய சமுத்திரத்தை ஒருவன் கைகளினால் நீந்திக் கடக்க முடியாது. அதனினும் கடுமை ஒருவன் பாசக் கடலைக் கடப்பது; அதற்கு குருவருள் வேண்டும். பாசக் கட்டைக் கடக்க நூலறிவு துணை புரியாது!

கரவி லாதபே ரன்பினுக்
கேளிவருங் கருணைக்
குரவ னாரு ளின்றிக்
கொடிய வெம்பாசம்
புரையில் கேள்வியாற் கடப்பது
புணையினா லன்றி
உரவு நீர்க்கடல் கரங்கொடு
நீந்துவ தொக்கும்,

குருவை நாங்கள் கடவுளாகவே மதித்தல் வேண்டும். குரு இறைவன் திருவருள் மயமாக விருக்கின்றார். குருவை வழிபடுதல் அவசியமென்பதை சுந்தரமூர்த்தி சுவாமிகள் “முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்” என்ற தேவார அடியில் தாமே குருவுக்கு வணக்கஞ் செலுத்திக் காட்டியுள்ளார். எண் சாண் உடம்பிற்கும் சிரசே பிரதானமென்பதுபோல ஒரு சமூகத்திற்குக் குரு வகுப்பே சிறந்தது. அவர்கள் தினமும் புரிகின்ற இயம நியமங்களினாலும் கிரியைகளினாலும் தவ வாழ்க்கைவாழுகின்றவர்கள். அவர்களைத் தவஞ் செய்சாதியென்றனர் அருணந்தி சிவாசாரியார். அவர்களுடைய தவவாழ்க்கை ஏனையோருக்கு ஒரு முன்மாதிரியாகும். யாவரும் குருவகுப்பினரைப் பின்பற்றித் தவஞ் செய்வார்கள்,

இக்காலம் எங்கள் குருவகுப்பினர் வறுமையினால் தங்கள் தவ வாழ்க்கையை நடத்த இயலாதவர்களாயிருக்கின்றார்கள். சைவமக்கள் அவர்களுடைய தவ வாழ்க்கையை ஊக்குவதற்கும உலக நன்மைக்கும் அவர்களுடைய பொருளாதாரத்தைப் பெருக்க முன்வருதல் வேண்டும. கோயிலதிகாரிகள் அவர்களுக்குப் போதிய சன்மானம் வழங்குதல்வேண்டும். கோயில் சம்பந்தமான கிரியைகளைத் தவிர தீக்ஷை, விவாகம், மரணம், கிருகப்பிரவேசம் சம்பந்தமான கிரியைகளைப் புரிவிக்கின்றவர்களும் குருமார்களுக்குப் போதிய சன்மானம் வழங்குதல் வேண்டும். குருவகுப்பினருடைய அந்தஸ்து உயர்ந்தால் சமயம் முன்னேறும். குரு வகுப்பினர் தாழ்வடைந்தால் சமயம் தாழ்வுறும்.

இன்று இக்கோவில் மகா கும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நடத்திய பிரதமகுரு. “கிரியாவித்தகர்” சிவத்திரு க. சிவபாதசுந்தரக்குருக்கள் அவர்களைப் பாராட்டும் இப் பெரு விழாவில் பங்குபற்றுவது மகிழ்ச்சியையளிக்கின்றது. அவர் ஆகமங்களையும், சைவத் தெய்வத் திருமுறைகளையும், சித்தாந்த சாஸ்திரங்களையும் புராணேதிகாசங்களையும் நன்கு கற்றவர். வித்துவான் கணேசஐயருடைய மாணவன். கோயில் திருவிழாக்கள், பய பக்தியுடன், பக்திச் சூழ்நிலையில் நடைபெற உபயகாரர்களும், ஊரவர்களும் உதவியாயிருந்து வரவேண்டும் என குரு அறிவுரை கூறுபவரென அறிந்துமகிழ்ச்சியடைந்தேன். எங்கள் சைவக் குருமார்கள் அவரைப்போன்று அறிவு ஒழுக்கம் படைத்தவர்களாய் குருத்துவத் தொழிலைப் புரிவது நாட்டுக்கு நன்மை பயக்கும். குருக்கள் ஐயா நீடூழி வாழ்ந்து சைவப்பணி புரிய இராஜராஜேஸ்வரியம்மையார் அருள் புரிவாராக”.

என்றிவ்வாறு சைவபரிபாலனசபையின் சமயப்பிரசார அமைச்சரும், இந்துசாதனம் பத்திரிகை ஆசிரியருமாகிய “சித்தாந்த சிரோமணி” மு. மயில்வாகனம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அடுத்து மேற்படி ஆலய பரிபாலன சபைத் – திருப்பணிச்சபைகளின் தனாதிகாரி திரு. இ. சரவணமுத்து அவர்களும், யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. க. சிவராமலிங்கம் அவர்களும் யாழ். நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக் கழகத் தலைவர் திரு. க. சொக்கலிங்கம் அவர்களும் 'கிரியா வித்தகர்' சிவத்திரு. சிவபாத சுந்தரக் குருக்களுடைய சமயப் பணிகளையும் ஆற்றலையும் பாராட்டி உரை நிகழ்த்தினார்கள். இளைப்பாறிய தலைமையாசிரியரும் ஸ்ரீ அம்பாள் ஆலய பரிபாலன சபைச் செயலாளருமாகிய திரு. வெ. கந்தையா அவர்கள் ஸ்ரீ மகாசபையோர் சார்பில் குருக்களவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி தமது வணக்கத்தைத் தெரிவித்தார்கள்.

மேற்படி விழாவுக்கென பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் அனுப்பிய பாராட்டுரை திரு. சொக்கன் அவர்களால்படிக்கப்பட்டது.

குருக்கள் அவர்கள் பதிலுரை வழங்கும்போது, “தமக்குச் சூட்டப்பெற்றபாராட்டுக்கள் யாவையும் தம்முடைய குருநாதனுக்கே உரியவை என்று கூறி, இக்கிராமத்து மக்கள் சிறந்த பக்தியுடையவர்களாகவும், கோயில் திருப்பணிகளிலே பெரும் நாட்டமுடையவர்களாகவும் விளங்குவதைக் கண்டு தாம் மகிழ்ச்சியடைவதாகக் கூறி, “நல்ல தருமங்கள் எவை எவையோ அவற்றை மனப் பூரிப்புடன் முன்வந்து செய்யுங்கள்; 'நாளை நாளை' என்று நற் பணிகளைப் பின்போடாதீர்கள்; 'நான் எனது' என்னும் செருக்கற்று பணி புரியுங்கள், பாவங்களை நீக்கி புண்ணியச்செயல்களைச்செய்யுங்கள்” என்று கூறினார்கள்.

இவ் விழா ஸ்ரீ ஆலய பரிபாலனசபை உபதலைவர் திரு. சு. பரநிருபசிங்கம் (பரமேசுவரக் கல்லூரிப் பதிலதிபர்) அவர்கள் தலைமையில் இம் மாதம் 15-ஆம் திகதி மாலை சிறப்பாக நடைபெற்றது.

ஆலயத்திலிருந்து குருக்கள் அவர்களை மங்கள வாத்திய சகிதம் ஸ்ரீ கோயில் அர்ச்சகர் இல்லத்துக்கு அழைத்துச் செல்லப் பெற்ற பொழுது வீதிகடோறும் மக்கள் விளக்கேற்றி நிறைகுடம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M, B. 10835

1. சந்தியாகு மரியாம்பிள்ளையும் 2. பெண் லூத்தம்மா
நாரந்தனை, ஊர்காவற்றுறை —வழக்காளிகள்.

எதிராக

1. கல்லையா சத்திவேல்பிள்ளையும் 2. பெண் அருந்ததி
அல்லைப்பிட்டி — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B 10835-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1971-ம் ௵ புரட்டாதி மீ 8-ந் திகதி (8-9-71) புதன்கிழமை முற்பகல் 10-30 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 1000/-ம், 24-5-69 தொடக்கம் 27-7-70 வரைக்கும் ரூபாய் 700/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 210/- இதில் ரூபா 84/- கொடுபட்டது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி அல்லைப்பிட்டி கோவிற்பற்று அல்லைப்பிட்டி இறை "நாவலடி" கெ. பர 26 இதடங்கலும் இதற்கு எல்லை கிழக்கு சிவலிங்கம் பெண் சவுண்தரலட்சுமிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு வயித்திலிங்கம் கணபதிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு இலங்கநாதர் சுப்பிரமணியத்துக்குமுரிய ஆதனம், தெற்கு நடராசா பெண் வள்ளிநாயகிக்குமுரிய ஆதனம்.

சு. கந்தசாமி
19, சுவாமியார் வீதி, கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
கொழும்புததுறை, யாழ்ப்பாணம். எம். 195 20-8-71

Commission Sale

கோட்டு கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழ இல: **10421**
(மரணம்) இமையாணன்குறிச்சி, வெள்ளையர் வல்லிபுரம்
—வழக்காளி

இமையாணன் குறிச்சி சிதம்பரி மாணிக்கம் காலஞ்சென்ற வழக்காளியின் பிரதிகாரியஸ்தர் —பதில் வழக்காளி

எதிராக

1 கரணவாய் வடக்கு. கணபதி அண்ணாமலையும்
2 பெண் இரத்தினமும் —எதிராளிகள்

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எமக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனம் 1971-ம் ௵ ஐப்பசி மீ 9-ம் திகதி (9-10-71) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திலிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று பொலிகண்டிக் குறிச்சியிறை கருகப்புலம் வடக்கு நி பர. 10, 3/8 இதில் கிழக்குப் புறமாக 1/9 பங்குக்கு ஆட்சிப்படி கி பர. 1 குளி 2¼ எல்லை கிழக்கு விரகத்தி மகள் நல்லபிள்ளைக்குரியவாதனம், வடக்கு: கதிரன் கணபதிக்குமுரியவாதனம். மேற்கு வல்லிபுரம் கந்தையாவுக்கும் மறுபேருக்குமுரியவாதனம், தெற்கு கணபதி அண்ணாமலைக்கும் பெண் இரத்தினத்துக்குமுரியவாதனம், இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், வடலிகளும்.

திரட்சித்தொகை: — —	ரூபா 699-00
ரூபா 500/-க்கு 14—3—69 தொடக்கம் 25—6—69 வரை 12 வீத வட்டி	ரூபா 16-75
ரூபா 715-75க்கு 25—6—69 தொடக்கம் 17—4—70 வரை 5%வட்டி ரூபா 5/- குறைவு	ரூபா 33-45
	749-20
செலவு —	154-66
	903-86
இதில் கொடுபட்ட தொகை —	ரூபா 240-00
மொத்தம் ரூபா	663-86
முத்திரைச் செலவு	3-60
மொத்தம் ரூபா	667-46

இத்துடன் விற்பனவுத் திகதிவரையுமுள்ள வட்டியும்

R. S. இராமநாதன்
"உமாபதி" கொம்மிசனரும், விலைமதிப்பாளரும
நெல்லண்டை ரோட்டு, எம். 198 20-8-71
பருத்தித்துறை. 20-8-71

கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு. இல: M B 10019
முருகேசபிள்ளை கனகநாயகம்
ரெம்பிள் ரோட், நல்லூர்,
யாழ்ப்பாணம் —வழக்காளி

எதிராக

1. வேலு கந்தையா 2. கந்தையாசாமி, 3. கந்தையா சதாசிவம் 4. கந்தையா திருநாவுக்கரசு 5. கந்தையா அரியகுட்டி 6. கந்தையா நயினார், 7. சின்னப்பு அருள்ராசாவும் பெண், 8 இராசம்மாவும், 9. கதிர்காமு நடராசாவும், 10 கனகமணி, 11. கந்தையா தில்லையம்மாவும், 12. கந்தையா கமலா, எல்லோரும். வண்ணார்பண்ணை கிழக்கு,
—எதிராளிகள்

யாழ்ப்பாணம்டிஸ்திறிக் கோட்டில் M B 10019 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1971-ம் ௵ ஆவணி மீ 31-ம்திகதி(31-8-71) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 5660/-ம் 31-5-68 தொடக்கம் 3-7-69 வரைக்கும் ரூபாய் 5000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 521-25

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக்கோவிற்பற்று வண்ணார்பண்ணை வட கிழக்கில் உள்ள நீர் நீவியடி அல்லது நீர் நொச்சியடி, என்னும் 30 நிலப்பரப்பில் இரண்டு துண்டாயுள்ள 20 பரப்பும் 10 பரப்பிலும் உள்ள J. D. வீரசிங்கம் உத்தரவுபெற்ற உலாந்தாவின் 2442 ம் இலக்க 28-1-48 இல் தீதிய படத்தில் 8-ம் துண்டாகிய 2 நிலப்பரப்பும் 13 குழியும் இந்த பிரிக்கப்பட்ட 2 பரப்பு 13 குழி ஆகிய 8 ம் துண்டில் அடங்கிய இரண்டு கல்வீடுகளும் 10-ம் துண்டில் உள்ள கிணற்றில் பங்கும், 15ம் துண்டு வழியாக 15ம் துண்டில் இருந்து தெற்குப் பக்கத்து ரோட்டைச சேரும் ஒழுங்கையில் பாவிப்பு உரித்தும் ஆனால் படத்தின்படி 16ம் துண்டிலுள்ள கிணற்றுப் பங்கு உரிமை அற்றதும் 8ம் துண்டில் அடங்கியதாகவும், இதற்கு எல்லைகள்: கிழக்கு ஒழுங்கை, வடக்கு பரமநாதர் சரவணைப் பெருமாளின் ஆதனம், மேற்கு 1ம் துண்டும் 15ம் துண்டு என்று காட்டப்படும் கையொழுங்கையும், தெற்கு 9ம் துண்டுக்காணி, 16ம் துண்டின் வடக்கு எல்லை வேலியும் 6ம் துண்டுக் காணியின் மேற்கு ஒழுங்கையின் கிழக்கு வேலியும் மேற்கு வேலியும், 16ம் துண்டுக்காணியின் சொந்தக்காரருக்கே உருத்துடையது.

சோ. நரசிங்கம் J. P.
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
தொல்புரம், மதிப்பாளரும்.
13-7-71 M 202 20-8

டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் மறைவு

டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் அவர்களின் பிரிவு தமிழினத்திற்கும், நாட்டுக்கும் பெரும் இழப்பாகும். டாக்டர் அவர்கள் சிறுவயதிலேயே சர்வாதிகார ஆட்சியை ஒழித்து மக்கள் சுதந்திரமாக வாழவேண்டுமென்ற கொள்கையைக் கடைப்பிடித்தவர். லண்டனில் வைத்தியக் கல்வி பெறும் காலத்திலேயே இந்திய மக்களுடன் சேர்ந்து இந்திய நாட்டுச் சுதந்திரத்து உழைத்தவர். அப்பயிற்சி இலங்கைச் சுதந்திரம் பெறுவதற்கும் பயனளித்தது இலங்கை சுதந்திரமடைந்தபின் தமிழ்மக்களின் அரசியலுரிமைகளைப் பெற தமிழ்க் காங்கிரசிலும், தமிழரசிக் கட்சிலும் சேர்ந்து உழைத்தவர். அரசியலிலும் உழைக்கும் பொழுது தமது செல்வம் சுக வாழ்வு முதலியவற்றை தமிழ் மக்கள் உரிமைப் போராட்டத்திலீடுபட்டு இழந்தனர். தமிழர்கள் நடத்திய சத்தியாக்கிரகப் பேரில் பொலீசாரால் தாக்கப்பட்டு, வீட்டுக் காவலிலும் வைக்கப்பட்டார். அஞ்சாமை, வாக்குச் சாதுரியம்; வாக்கு வன்மை முதலிய பண்புகள் படைத்தவர். தமிழ் உரிமைக்காகப் போராடிய போதிலும், சிங்கள மக்களுடன் நட்பாக வாழ்ந்தவர். தமிழ் மக்களும்; சிங்கள மக்களும் நாட்டில் ஒற்றுமையாக வாழ்வதற்கும், நாட்டில் சமாதானம், செல்வம்பெருகுவதற்கும் ஒற்றையாட்சிலும் பார்க்க சமஷ்டி அரசே சிறந்ததென்ற கொள்கையை யுடையவர். டாக்டர் அவர்கள் ஒரு சிறந்த தமிழபிமானி. அவருடைய கொள்கைகளைப் பின்பற்றிக் கடமையாற்றிய தமிழ் மக்களுடைய தொகையே அவருடைய பெருமைக்கும், புகழுக்கும் சான்றாகும். டாக்டர் அவர்களின் பிரிவு நாட்டுக்குப் பெரும் இழப்பாகும்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

வழ, இல. M B 6669
சரவணமுத்து சின்னத்துரை
கொக்குவில் கிழக்கு,
—வழக்காளி

எதிராக

1 வீரசிங்கம் நவரட்ணம்
2 பெண் ராஜேஸ்வரி, கொக்குவில் கிழக்கு,
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 6669-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனம் 1971-ம் ௵ ஐப்பசி மாதம் 9-ஆம் திகதி (9-10-71) சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு அவ்வாதனத்திற்குள் நின்று பிரசித்தஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதலும் வட்டியுமாக 6,540/- ரூபாய் இன்னும் 4000/- ரூபாவிற்கு 20-5-64 — 21-1-65வரைக்கும் 12 வீத வட்டியும் கூட்டிக் கூடியதொகைக்கு 21—1—65 தொடக்கம் முழுப்பணம் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியு் கோட்டுச் செலவு ரூபா 302-86 சதம் ஏற்பட்ட செலவு 191-26 வெளியாத்துச் செலவு 58-75 இனிமேலேற்படுஞ்செலவு52-85) இதில் எதிரிகளால் கொடுபட்ட ரூபா 1600/- போக மிகுதி

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டமும் பகுதியும் நல்லூர்க் கோவிற்பற்று கொக்குவில் மேற்கிறை 'கக்கொக்கன்" பர. கி. லா. 2 குளி 16 ஆனால் உலாந்தா மேஸ்தர் C. இராஜகாரியரால் 1956 ம் ௵ ஆவணி மாதம் 29-ம் திகதி 957ம இலக்கத்தில் வரைந்த படத்தின் படத்தின்படி பர கில, இலா 2 குளி 17¾ வீடும், சுப்பர் சின்னப்புவின் காணியிலிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும். வழிவாய்க்கால் பாவிப்புருததும், இககாணிக்குள்ளிருக்கும் புதுக் கிணறும் பயிர்களும். இந்தப் பர. கி. லா. 2 குளி 17¾க்கும் எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை சண்முகம்பிள்ளைக்குமுரிய ஆதனம், வடக்கு சின்னையா செல்லையாவுக்கும் ராசா கைம்பெண் மாணிக்கத்திற்குமுரிய ஆதனம், மேற்கு குறித்த மாணிக்கத்திற்குமுரிய ஆதனமும். ஒழுங்கையும் தெற்கு கையொழுங்கை பதிவு இல: E 247/183

தா, க. பொன்னுத்துரை J P
கொமிசனரும் விலைமதிப்பாளரும்.
'அகிலகம்" 28/1, யாழ் வீதி,
எம். 199 20-8-71

அவர்ஒருதொண்டர்

(1- ஆம் பக்கத்தின் வளர்ச்சி)

தவர். தமது மூதாதையர்களைப்போலச் சைவ சமய விருத்திக்கும் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் அயராது உழைத்தவர். சைவ பரிபாலன சபையினது சமயப்பணிகளுக்கும் இந்துசாதனம் தமிழாங்கிலப் பிரசுரங்களின் வளர்ச்சிக்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியினதும் அதனோடிணைக்கப்பெற்ற கல்வித்தாபனங்களினதும்மேம்பாட்டுக்கும் பெருதவி புரிந்து அவற்றின் நிருவாகத்தைக் கவனித்து வந்தவர். அவர் பேர் புகழை விரும்பாது இத்தாபனங்களுக்கு நிதியுதவியும் புரிந்தனர். இத் தாபனங்களை நிருவகித்த காலத்தில் அவருக்கு அறிவு ஆற்றலிருந்தும் பிறர் வற்புறுத்திய காலத்தில் தலைமைப் பதவியை ஏற்க மறுத்துவிட்டனர். உண்மை, கடவுள் பக்தி இடையரு உழைப்பு, திடசித்தம், நடுவுநிலைமை, ஒப்புரவுடைமை முதலிய பண்புகள் நிறைந்தவர். சமயப் பணி கல்விப் பணியுடன் சமூகத்தொண்டும் புரிந்தனர் அரசியலில் தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளை இன்ன வகையில் பெறவேண்டுமெனத் தீர்க்காலோசனை புரிந்து முடிவுசெய்து அவற்றின்படி தொண்டாற்றியவர். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் ஒரு முக்கியமான பதவியை வகித்துத் தமிழர்களுடைய நலனுக்காக அமைதியாகத் தமது சொந்தப் பொருளைச் செலவு செய்து நெடுங்காலம் உழைத்தவர். அவரைப்போல ஒரு தொண்டனை இனி நாம் பெறுதல் அரிதினும் அரிது.

அவர் ஒரு வழக்கறிஞராகவும் நொத்தாரிசுவாகவும் நேர்மையுடன்தொண்டாற்றி ஆயிரக்கணக்கான மக்களது பாராட்டையும் நன்மதிப்பையும் பெற்றவர். யாழ்ப்பாணத்தில் தோன்றிய பிரபல வழக்கறிஞர்களு ளொருவர், அவருடைய அரிய தொண்டுகளுக்கு உறுதுணையாயிருந்த மதிப்புக்குரிய அவருடைய பாரியாருடைய சேவையையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். அம்மையாருடைய பொறுதியும் பதிபக்தியும் அவருக்குப் பேரூக்கமளித்தன. அந்த அம்மையாருக்கும் அவர்களுடைய புத்திரர்களுக்கும் அவருடைய நெருங்கிய உறவினருக்கும் எமது உளங்கனிந்த அநுதாபம் உரித்தாகின்றது. எல்லாம் வல்ல சிவபெருமான் அவருடைய ஆன்மாவுக்குச் சாந்தி அளிப்பாராக.

நாரந்தனைவடக்கு, தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோவில்

ஷை ஆலயத்தின் வருடாந்த உற்சவம் 26-8-71 வியாழக்கிழமை ஆரம்பமாகி பத்து நாட்களுக்கு நடைபெறும். பத்தாவது தினம் 4-9-71 சனிக்கிழமை பௌர்ணமியன்று முற்பகல் விசேட அபிஷேக ஆராதனைகளும், பிற்பகல் 4 மணிக்கு நாகசமுத்திர தீர்த்தோற்சவமும் நடைபெறும். தினமும் மாலைப் பூசைக்குப் பின் ஸ்ரீ மகாமேரு யந்திர பூசை, கூட்டுப்பிரார்த்தனை, சமயச்சொற்பொழிவுகள் சுவாமி திருவீதிவுலா வருதலும் நிகழும்.

உரும்பிராய் பட்டின சபையில் அநுதாபக் கூட்டம்

எங்கள் ஊரில் இறுதி வரைக்கும் நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் மக்களின் நலன் கருதியும் அயராது உழைத்த உத்தமரும், நியாயதுரந்தரருமான உயர் திரு ஆசைப்பிள்ளை தனபாலசிங்கத்தின் மறைவு எங்கள் கிராமத்திற்கும், இந்நாட்டின் மக்களுக்கும் பெரும் பேரிழப்பாகும்.. அன்னார் சாதி மத அரசியற்பேதம் ஏதும் இன்றி திரிகரணசுத்தியோடு செய்த தொண்டுகள் அளப்பரியன. எடுத்தகாரியத்தைப் பொறுப்புணர்ச்சியோடு மனச்சாட்சியின் அடிப்படையில் செயற்படுத்தும் திறமை அன்னாருக்கே உரித்தான தனிப்பண்பாகும். சொல்லுக்கும் செயலுக்கும் எதுவித முரண்பாடுமின்றி வாழ்ந்த செம்மல், இன்று அமரராகிவிட்டார்' அவரின் பிரிவைத தாங்க முடியாது தவிக்கும் அவரின் குடும்பத்தாருக்குச் சபையின் ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவிக்க வேண்டுமென்றும், உரும்பராய்ப் பட்டினசபையில் தலைவர் திரு. க. பத்மராசா தலைமையில் நிகழ்ந்த மேற்படி சபைக் கூட்டத்தில் அவரின் ஆன்மா சாந்தியடைய வேண்டுமென்றும் இறைவனை வேண்டி, இரண்டு நிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப் பெற்றது.

* * *

நாவலர் நல்வாக்கு

உள்ளது போதும் என்று அமைந்த மனமே குறைவு அற்ற களஞ்சியம்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில்
வழக்கு இலக்கம்: M B 7889

1. புத்தூர் மேற்கு, வீரவாகு சுப்பையா
2. ஷை யூர் பெண் பாறுபதிப்பிள்ளை
3. ஷை யூர் சுப்பையா தம்பிராசா —வழக்காளிகள்

எதிராக

1. புத்தூர் மேற்கு, பெரியான் பொன்னன்
2. ஷை யூர் பெண் பாறுபதி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 7889-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971-ம் ஆண்டு புரட்டாதி மீ 22-ந் திகதி (22-9-71) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 16 800-00ம், ரூபா 12,000/-க்கு 15-12-1965 தொடக்கம் 17-11-66 வரை 10 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 461-92 சதம் இதில் ரூபாய் 15,600/- கொடுபட்டது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர்க் கோவிற்பற்று புத்தூர் வடக்கிறை, "கொணுவற்காடும் குருக்கட்டும்" பா. கில. இலா. நாற்பத்தொன்பது குளி பதினைலரை (பர. கி இலா. 49 குளி 14½ எல்லை கிழக்கு ஒழுங்கையும், முருகன் சீலனுக்கும் பெண் செல்விக்கும் தவசி கதிரவேலனுக்குமுரிய ஆதனமும், வடக்கு சுப்பிரமணியம் சந்திரசேகரம் நாகரெத்தினத்திற்கும் சுந்தரமூர்த்தி பெண் மகாலெட்சுமிக்குமுரிய ஆதனங்கள். மேற்கு சுந்தரமூர்த்தி பெண் மகாலெட்சுமிக்கும் கந்தன் சபாபதிக்கும் பெண் முத்தம்மாவிற்குமுரிய ஆதனங்கள், தெற்கு கந்தன் சபாபதி பெண் முத்தம்மாவின் ஆதனமும் ரோட்டும், முருகன் வேலனுக்கும் பெண் செல்விக்குமுரிய ஆதனமும், இதடங்கலும் தெற்கெல்லைக்காணியிலிருக்கும் கிணற்றிலும் தண்ணீர் இறைக்கும் விஸ்றஞ்சி யந்திரத்திலும். இயந்திரம் வைக்கப்பட்டிருக்கும் கொட்டிலும் தண்ணீர்த் தாங்கியிலும் 3/போகமும் கொங்கிறீற் கல்லால் கட்டப்பட்ட இறைவாய்க்கால் வழியுரித்தும்.

காரைநகர் **வை. ஏரம்பமூர்த்தி**
1971-ம் ஸ்ரீ ஆவணிமீ 2-ம் திகதி. கொமிசனரும்,
எம். 201 20-8-71 விலைமதிப்பாளரும்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில் வழ: இல. M. B 11678

1. சிற்றம்பலம் வேலுப்பிள்ளை, அராலி தெற்கு, அராலி. —வழக்காளி

எதிராக

1. பெரியான் வயிரமுத்து பெண்
2. சின்னத்தங்கம், அராலி தெற்கு, அராலி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B, 11678-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1971-ம் ஸ்ரீ புரட்டாதி மீ 23-ம் உ (23-9-71) வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 1502/-ம், 9-5-70 தொடக்கம் 30-11-70 வரைக்கும் ரூபாய் 1000/-க்கு நூற்றுக்கு 9 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 344-40 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டை கோவிற்பற்று அராலி கிழக்கு தற்போது அராலி தெற்கு இறை "சம்பலம் தோட்டம்" விலப்பரப்பு 3 வீடு கிணறு செய்பயிர் வான்பயிர்களுடன் இதற்கு எல்லை கிழக்கு விஞசி சின்னையா பெண் பொன்னம்மாவின் ஆதனம், வடக்கு ஒழுங்கை மேற்கு நாகமுத்தன், நாகலிங்கம், வயிரவன் நாகமுத்தன் ஆகியோரின் ஆதனம், தெற்கு முத்தன் முருகன் பெண் சின்னட்டிக்குமுரிய ஆதனம், இது அடங்கலும். இதன் பதிவு இலக்கம்: E. 250/140

ப. நா தருமலிங்கம்
167/1 கோவில் வீதி, கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
யாழ்ப்பாணம், 12-8-71 எம். 196 20-8-71

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்
வழ. இல. M. B 11549

1. எஸ். செல்லையா கந்தையா
2. பெண் முத்துப்பிள்ளை, காரைதீவு மேற்கு. காரைதீவு. —வழக்காளிகள்

எதிராக

1. முருகேசு சுப்பிரமணியம்
2. சிதம்பரப்பிள்ளை முருகேசு
3. பெண் பொன்னுப்பிள்ளை, காரைதீவு மேற்கு. காரைதீவு. —எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 11549-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஆதனம் 1971-ம் ஸ்ரீ ஐப்பசிமீ 2-ந் திகதி (2—10—71) சனிக்கிழமை காலை 9-30 மணியளவில் அவ்வாதனத்துக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்,

தீர்வைத்தொகை: முதலும் வட்டியும் 2,385/- ரூபா, இன்னும் 1800/-ரூபாவிற்கு 11-3- 0 தொடக்கம் 23-9-70 வரைக்கும் 4% வட்டியும் கூட்டிக் கூட்டிய தொகைக்கு 23-9-70 தொடக்கம் முழுப்பணம் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும், செலவு அறவிடப்பட்டது

ஆதன விபரம்

வடமாகாணம் யாற்ப்பாண மாவட்டம், தீவுப் பகுதி. காரைதீவுக் கோவிற்பற்று தங்கோடை இறை 'ஓர்கியப்புலம்' பர. வி. லா. 4 குளி 9½ பனைகள் வடலிகள் வான்பயிர் செய்பயிர்களும் வீடுகளும் எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை பெண் முத்துப்பிள்ளையினுதனம், வடக்கு கார்த்திகேசு பொன்னையாவினுதனம், மேற்கு பரமநாதர் பெண் அன்னம்மாவிற்கும் சகோதரனுக்குமுரிய ஆதனம், தெற்கு வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலுக்குரிய காணியால் இக்காணிக்குப் போக்குவரத்திற்காக விடப்பட்ட தெரு. இவ்வெல்லைக்குட்பட்டவை அடங்கலும்.

தா. க. பொன்னுத்துரை J. P.
"அகிலகம்" கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்
28/1, யாழ்வீதி, யாழ்ப்பாணம்.12-8-71 M 197 20-8-71,

விழிச்சிட்டி சனசமூக நிலையம்

பரிசளிப்பு விழா

திரு. பீ. ஏ. எஸ். இராஜசேகரன் அவர்கள் தொண்டு பயனளிக்கின்றது.

(30-7-71) வெள்ளிக்கிழமை மாலை 7 மணி தொடக்கம் விழிசிட்டி ஞான வைரவர் ஆலய முன் மண்டபத்திலே தேவாரத் திருமுறைப் பண்ணிசைப் போட்டி நடைபெற்றது. இசைமணி வ. செல்லத்துரை அவர்களும், பண்ணிசைச் செல்வர் க. திருநாவுக்கரசு அவர்களும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர். போட்டி முடிந்ததும் கோயிற் பூசை நடைபெற்றது பூசை முடிந்தபின் 9 மணியளவிலே சன சமூக நிலையப் போஷகர் பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை அவர்களது தலைமையிலேபரிசளிப்புவிழா தேவார பாராயணத்துடன் ஆரம்பமாயது. தலைவர் அவர்கள் தமது முன்னுரையில் எங்கள் கிராமத்தில் தமிழ இலக்கண இலக்கியங்களும் புராணபடனமும், தேவாரப் பண்ணிசையும், சைவாசாரமும் அம்பலவாண உபாத்தியாயர், கணபதிப்பிள்ளை உபாத்தியாயர் என்டவர்களது காலங்தொட்டுப் பேணி வளர்க்கப்பட்டு வந்த வரலாற்றையும் அவற்றைத்தொடர்ந்தும் சோர விடாமல் வளர்க்க வேண்டியதன் அவசியத்தையும், இந்தியாவிலிருந்துவந்து யாழ்ப்பாணத்தில் தேவாரப் பண்முறையை நான்குவருடகாலமாகப் பயிற்றிக்கொண்டிருக்கும் தேவார ஆசிரியர் காஞ்சிபுரம் மெய்கண்டாராதீன ஓதுவார் மூர்த்தி உயர் திரு. பீ. ஏ. எஸ். இராசசேகரன் அவர்களிடம் தேவாரப்பண்முறையைப் பயின்று கொண்டிருக்கும் நான்கு ஆசிரியர்கள் எமது கிராமத்தில் இருப்பதனால் அவர்களிடமிருந்து எமது கிராமத்துப் பிள்ளைகள் தேவாரப் பண்முறையைப் பயின்று எதிர்காலத்திலும் எமது கிராமத்துப் பிள்ளைகள் தேவாரப் பண் முறையைப் பயின்று எதிர் காலத்திலும் எமது கிராமத்தின் பெருமையைப் பேணிக்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

அன்று சுந்தரமூர்த்திநாயனாது குருபூசைத் தினமுமாதலால் திரு. இ. நமசிவாயம் ஆசிரியர் அவர்களால் சுந்தரமூர்த்தி நாயனாரிடத்தில் விளங்கிய அற்புதங்கள் சுருக்கமும் விளக்கமுமாக எடுத்துப் பேசப்பட்டன.

தேவாரப் போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தவருள் ஒருவராகிய இசைமணி வ. செல்லத்துரை அவர்கள் தேவாரப்போட்டியிற் பங்குபற்றிய மாணவர்களின் திறமையை வியந்து கூறியதோடு அவர்கள் கவனிக்கவேண்டியசிலதிருத்தங்களையுங்கூறினர்.

தேவாரப் போட்டிப் பொறுப்பாளர் திரு செ. சிவசுப்பிரமணியம் அவர்கள; தலைவர், மத்தியஸ்தர், தேவாரப் போட்டிக்கு மாணவர்களை அனுப்பிய பெற்றோர், பரிசில்களை அன்பளிப்புச் செய்தவர்கள், விழாவைச் சிறப்பிகக வந்தவர்கள் ஆகிய அனைவருக்கும் நன்றி கூறினர்.

8—6—71 இல் நடைபெற்ற சைவசமய பாடப் பரீட்சையிற் சித்தியெய்தியவர்களுக்கும், தேவாரப் போட்டியில் திறமை காட்டியவர்களுக்கும் தலைவர் அவர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டது. (அடுத்த இதழில் பரிசுபெற்றபிள்ளைகளின் பெயர்கள் வெளிவரும்)

வெளிவந்துவிட்டது. உ

சிவத்தியான மாலை

ஔவையார் அருளிய விநாயகரகவல், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் அருளிய திருவெழுகூற்றிருக்கை, மணிவாசகர் பாடிய சிவபுராணம் ஆகிய மூன்றும் பத்தர்களின் தினசரி பாராயணத்துக்காக பதிக வரலாறு. தெளிவுரை முதலியவற்றோடு சேர்த்துள்ள கைநூல். விலை சதம 35

யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலுமுள்ள பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும்.

வெளியிட்டோர்:
யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம்
411/1 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டில்
வழ: இல A 953 / M B. 8620

1 வேம்படி ரோட், யாழ்ப்பாணம்.
ஆறுமுகம் சரவணமுத்து இராசேந்திரம்
2 இல: 233, கங்டோப் வீதி. கொழும்பு.
ஆறுமுகம் சரவணமுத்து நடராசா —வழக்காளிகள்

எதிராக

காலஞ்சென்ற 1. ஐங்கம்பணி இணுவில். முத்துவேலு கைம்பெண் பராசக்தி,
2. ஷை யூர் வைரநாதசுந்தரம் கைம்பெண் சிவஞானம் தனக்காகவும் காலஞ்சென்ற 1ம் எதிராளி முத்துவேலு கைம்பெண் பராசக்தியின் ஆதனங்களின் பாராமரிப்புக்காரியாகவும், —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 8620 இலக்க வழக்கின் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971ம் ஆண்டு புரட்டாதி மாதம் 27ந் திகதி (27-9-71) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 2000-00மும் ரூபாய் 1000-00க்கு 20—11—66தொடக்கம் தீர்வைத் திகதி 2—5—68 வரைக்கும் 18வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 311-25 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் தீவுப்பகுதி புங்குடுதீவு கோவிற்பற்று புங்குடுதீவு மேற்கிறை "சிறியகொண்டல்" பர. நெ இலா. 46 குளி 10 இதிற் சொரிவலாய் ¾ பாகம். மேற்குப் பக்கத்தில் தாங்கள் ஆட்சிபண்ணும் பா. நெ. இலா. 35 குளி 1½ இதில் மேற்குப் பக்கத்தில் அறுதி விற்கப்பட்ட பர நெ இலா. 18 நீக்கி மிகுதி பா. நெ. இலா. பதினேழு குளி ஒன்றரை (பர. நெ. இலா. 17 குளி 1½) இந்தப் பா. நெ. இலா. 17 குளி 1½க்கும் எல்லை கிழக்கு கனகசபை அன்னம்மாவிற்கும் பிள்ளையார் கோவிலுக்கும், A. சரவணமுத்துவிற்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனங்கள், வடக்கு காசிப்பிள்ளை பெண் அன்னலெட்சுமிக்கும் பங்காளர்களுக்கும், பிள்ளையார் கோவிலுக்கும் குமாரசுவாமி ஐயர் இரத்தினசபாபதி ஐயருக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனங்கள் மேற்கு அம்பலச்சிப்பிள்ளை கந்தையாவிற்குமுரிய மிகுதியாதனம் தெற்கு ரோட்டு இடங்கலும்.

வை. ஏரம்பமூர்த்தி
காரைநகர், 1971-ம் ஸ்ரீ ஆவணிமீ 10-ந்திகதி கொமிஷனரும்
எம்.200 20-8-71, விலைமதிப்பாளரும்.

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

மறைஞானசம்பந்தர் குருபூசை

மறைஞானசம்பந்தசிவாச்சாரியார் குருபூசை 23-8-71 ல் சைவபரிபாலனசபை ஆதரவில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இரவு நடைபெறவிருக்கிறது.

சங்காபிஷேகம்

கொல்லங்கலட்டிப் பிள்ளையார் ஆலய மகா சங்காபிஷேகம் 24 8.71 இல் நிகழவிருக்கிறது.

பணம்பொருள் ஆராய்ச்சிக்குழு

பணம்பொருள் ஆராய்ச்சிக்குழு 26-ம் தேதி கொழும்பில் கூடும்.

ஸ்ரீ அரவிந்தர் நூற்றாண்டு விழா

புகழ்பெற்ற ஞானியும், அநுபூதிமானுமாகிய தவச் செல்வர் ஸ்ரீ அரவிந்தர் ஞாபகார்த்த விழாவினை இலங்கையில் கொண்டாடுவது பற்றி ஆலோசனைபுரிய கொழும்பு விவேகானந்த சபையினதும், ஸ்ரீ அரவிந்தர் சபையினதும் ஆதரவில், இராமகிருஷ்ண மண்டபத்தில் ஒரு கூட்டம் 15-8-71 ல் நடைபெற்றது. கீழ்வரும் தீர்மானம் நிறைவேற்றியது. "இலங்கையிலும், பிறவூர்களிலும் ஸ்ரீ அரவிந்தருடைய நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்குரிய நடவடிக்கைகளைக் கையாள அரவிந்தர் நூற்றாண்டு விழாச் சபையொன்றினைத்தாபித்து 15-8-71 தொடக்கம்ஷை விழாவினைக் கொண்டாடஆரம்பித்தல்வேண்டும்."

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில்; 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மூ. மயில்வாகனம் அவர்களால் 20—8—1971 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மூ. மயில்வாகனம் அவர்கள்